# இலங்கையில் குடியுரிமையின் பரிணாம வளர்ச்சியும் தற்கால நிலையும்

**யஷ்மியா குகதாசன்**
jashmiy.jecy@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தற்போதைய இருபத்தோராம் நூற்றாண்டில் மிக முக்கியமான ஒரு கருத்தியலாகக் குடியுரிமை பற்றிய சிந்தனை மாறியுள்ளது. இன்றுவரை குடியுரிமை தொடர்பான தெளிவான அறிவுப் பிரஜைகள் மத்தியில் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. ஏனெனில், இவ் எண்ணக்கருவானது காலத்திற்கேற்ப மாற்றமடைந்தும் வளர்ச்சியடைந்தும் வருகின்றது. பொதுவாகக் குடியுரிமை என்பது ஒரு நாட்டின் சிறந்த குடிமகனாகவோ, குடிமகளாகவோ இருப்பதற்கான உரிமையைக் குறித்து நிற்கின்றது. இவ்வுரிமையில் அந்நாட்டு அரசியலில் பங்குகொள்ளும் உரிமையும் அடங்கும். சிவில், அரசியல், சமூக குடியுரிமைகள் ஆரம்ப காலத்தில் அரசுகளிடையே முக்கியத்துவம் பெற்றன. இருப்பினும் சமகாலத்தில் பிராந்தியக் குடியுரிமை, சர்வதேசக் குடியுரிமை, இரட்டைக் குடியுரிமை என்பன முக்கியம் பெறுகின்றன. மனிதனின் சிறப்பான வாழ்விற்கு, குடியுரிமையானது மிக அவசியமாகும். இலங்கையிலும் குடியுரிமை என்பது பல்வேறு பரிணாமங்களைக் கொண்ட ஒன்றாகவும் குழப்பம் நிறைந்த ஒன்றாகவும் காணப்பட்டது. குறிப்பாக இலங்கையில் குடியுரிமை தொடர்பான பிரச்சினை என்பது மிக அண்மைக் காலம் வரையில் தீர்க்கப்படாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. அந்தவகையில் இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாகக்கொண்டமைந்த இவ்வாய்வானது இலங்கையில் குடியுரிமையின் பரிணாம வளர்ச்சியினையும் தற்காலத்தில் காணப்படும் சிக்கல்களையும் விபரண ரீதியாகப் பகுப்பாய்வு செய்கின்றது. குடியுரிமைச் சட்ட ஏற்பாடுகளின் பலம் மற்றும் பலவீனங்கள், நிலையான சமாதானத்தினைக் கட்டியெழுப் புவதில் குடியுரிமை ரீதியான ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுத்திய தாக்கங்கள் என்பன இவ் வாய்வின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** குடியுரிமை, குடியுரிமைச் சட்டம், நாடற்றவர்கள், இலங்கைக் குடியுரிமை, இந்தியப் பிரஜா உரிமைச்சட்டம்

## அறிமுகம்

இலங்கையின் குடியுரிமை பற்றிய ஆய்வானது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றது. வரலாற்றடிப்படையில் நோக்குகின்ற போது, இலங்கையில் மன்னராட்சி காலத்தின் போதும், காலணித்துவ ஆட்சியாளர்களான போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர்களது ஆட்சிக்காலங்களின் போதும் நன்கு ஒழுங்கமைந்த ஓர் அரசியல் மற்றும் நிர்வாக முறைமைகளைக் காணமுடியாது. இதனால் அக்காலத்தில் குடியுரிமை தொடர்பில் பெரியளிவில் முக்கித்துவம் கொடுக்கப் படவில்லை. போர்த்துக்கேயர்களும், ஒல்லாந்தர்களும் இலங்கையில் பொருளா தார ரீதியாக பயன்பெற எண்ணினார்களே தவிர, இஸ்திரமான அரசியல் முறைமை ஒன்றினை வழங்கவில்லை. இந்த நிலையில் ஓர் அரசியல் அமைப்பின் கீழ் இலங்கை ஆட்சிமுறையை வழிநடத்திய ஆட்சியாளர் களாகப் பிரித்தானியர்களைக் குறிப்பிட முடியும். முதன் முதலாக இலங்கைப் பிரஜைகள், அரசியல்யாப்பு ஏற்பாடுகளின் ஊடாகவும் சர்வசன வாக்குரிமையின் ஊடாகவும் குடியுரிமை தொடர்பில் பழக்கப் பட்டனர். இக்காலப்பகுதியில் பெருந் தோட்டத்துறைகளில் பணியாற்றுவதற் கென இந்தியாவில் இருந்து தமிழ் மக்கள் அழைத்துவரப்பட்டனர். இவர்கள் இலங்கை சுதந்திரமடையும் வரை இலங்கைப் பிரஜைகளுக்குச் சமமான வகையில் குடியுரிமையினையும் ஏனைய உரிமை களையும் அனுபவித்து வந்தனர். இலங் கையின் குடியுரிமை என்பது இலங்கையில் இடம்பெற்ற இரண்டு முக்கியமான நிகழ்வுகளால் சர்வதேச ரீதியாகப் பிரபல்யமடைந்தது. 1948ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை குடியுரிமைச் சட்டம் இலங்கை மக்களுக்கு வம்சாவழியில் குடியுரிமை மற்றும் பதிவியல் குடியுரிமை ஆகிய இரண்டு வகையான குடியுரி மையினை வழங்கியது. இந்தச் சட்டத்தின் மூலம் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஓர் அன்னியக் குழுவாகக் கருதப்பட்டனர். சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் அரசியல் ஒழுங்கில் பன்முகக்கலாசாரம் குறித்த விவாதம் மேலெழுந்தது. இதன் போது குடியுரிமை குறித்த விடயம் தேசியப் பிரச்சினையுடன் இணைந்த ஒன்றாக நோக்கப்பட்டது. அரசியலமைப்பு வழங்கிய குடியுரிமை உரிமைகள் அனைத்து மக்களுக்கும் சமமாக வழங்கப் படவில்லை என தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சிகளும் காலத்திற்கு காலம் குடியுரிமைச்சட்டம் தொடர்பில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களும் இந்திய வம்சாவளியினரால் இழக்கப்பட்ட குடியுரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ளு வதற்காக கொண்டு வரப்பட்ட ஏற்பாடுகள் இலங்கைக் குடியுரிமையின் பரிணாம வளர்ச்சியைச் செம்மைப்படுத்தின.

## இலக்கியமீளாய்வு

Derek Heater (2004), The brief history of the citizenship எனும் நூலில் குடியுரிமை என்றால் என்ன என்பது பற்றியும் குடியுரி மையின் வரலாறு பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது. குறிப்பாக கிரேக்காலக் குடியுரிமை, ரோமகாலக் குடியுரிமை, மறுமலர்சிக்காலம் மற்றும் நவீனகாலத்தில் குடியுரிமை எவ்வாறு காணப்பட்டது என வரலாற்று ரீதியான குடியுரிமையின் வளர்ச்சி தொடர்பில் ஆராய்கின்றது. முழுவதும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட இந்நூல் குடியுரிமை தொடர்பில் ஒரு உலகளாவிய வளர்ச்சியினை வெளிப் படுத்தி நிற்கின்றதே தவிர இலங்கையின் குடியுரிமையின் வரலாறு தொடர்பில் எதுவிதமான கவனமும் செலுத்தவில்லை.

Rebecca Wolozn (2006) "Citizenship issues and issuing citizenship: A case study of Sri Lankan's citizenship laws in a global context" எனும் ஆய்வுக்கட்டுரை உலகளாவிய ரீதியில் குடியுரிமை தொடர்பான விளக்கம், இந்தியப் பிரஜைகளின் குடியரிமையில் காணப்பட்ட பிரச்சினைகள் என்பன தொடர்பில் பேசியுள்ளது. இந்தியப் பிரஜைகள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட விதம், சுதந்திரத்திற்கு பின்னர் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டம், யுத்த காலப் பகுதியில் (1986-1988) காணப்பட்ட குடியுரிமையின் நிலை மற்றும் 2003-2009 காலப்பகுதியில் குடியுரிமை தொடர்பில் காணப்பட்ட தன்மையினை முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாகக் கொண்டு விளக்குகின்றது. இந்த ஆய்வுக்கட்டுரை வெறுமனே இந்திய பிரஜைகளின் குடியுரிமைப் பிரச்சினை தொடர்பில் அலசி ஆராய்கின்றதே தவிர இலங்கையின் குடியுரிமை வளர்ச்சி மற்றும் தற்காலத்தில் காணப்படும் சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

L.L.T.Periris, ( 1974) "The Citizenship Law of the republic of Sri Lanka (Ceylon)" எனும் நூலில் இலங்கையின் குடியுரிமைச் சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் விளக்கப்படுகின்றது. குறிப்பாக காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்தப்பட்ட குடியுரிமைச் சட்ட ஏற்பாடுகளை நடைமுறை உதாரணங்களை அடிப்படையாகக்கொண்டு விளக்குகின்றது. Rebecca Wolozn கட்டுரையைக் காட்டிலும் L.L.T.Periris இந்நூல் இலங்கை குடியுரிமைச் சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவான விளக்கத்தினை வழங்குகின்றது. இதிலும் 1948ம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையில் காணப்பட்ட குடியுரிமைச் சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலேயே இந்நூல் கவனம் செலுத்துகின்றது. குடியுரிமையின் ஆரம்பகால நிலைதொடர்பிலோ அல்லது தற்காலத்தில் குடியுரிமை தொடர்பில் காணப்படும் சவால்கள் தொடர்பிலோ இவ் இரண்டு நூல்களும் கவனம்செலுத்த வில்லை.

இலங்கையின் குடியுரிமை தொடர்பான பெரும்பாலான இலக்கியங்கள், இந்தியப் பிரஜைகளின் குடியுரிமை தொடர்பான பிரச்சினைகளையும் 1948ம் ஆண்டு குடியுரிமைச்சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலான பிரச்சினைகளையும் இனமுரண்பாட்டிற்கும் குடியுரிமைச்சட்ட ஏற்பாட்டிற்குமிடையிலான தொடர்புகள் குறித்துமே விளக்குகின்றன. இவை இலங்கையின் குடியுரிமை வரலாற்று வளர்ச்சி தொடர்பிலோ நடைமுறையில் குடியுரிமை தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலோ பெருமளவு கவனம் செலுத்தவில்லை. இவ்விடயம் தொடர்பில் பக்கச்சார்பான ஆய்வுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. மேலும் இலங்கையின் குடியுரிமை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை அடையாளம் காண்பதும் நடைமுறையில் காணப்படும் குடியுரிமைச்சட்டங்கள் தொடர்பில் காணப்படும் சவால்கள் தொடர்பாகவும் மிகக்குறைவான ஆய்வுகளே காணப்படுகின்றன. இதனை ஆய்வு இடைவெளியாகக்கொண்டு ஆய்வுக் கட்டுரையானது வரையப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

முழுவதும் இரண்டாம் நிலைத் தகவல்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளைச் சுருக்கமாக விபரிக்கின்ற இந்த ஆய்வுக்கட்டுரையானது, இலங்கையில் குடியுரிமையின் பரிணாம வளர்ச்சியினையும், இது தொடர்பில் காணப்படும் யாப்புசார் சட்ட ஏற்பாடுகளின் பலம் மற்றும் பலவீனங்களையும்

அடையாம் காண்பதனை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் குடியுரிமை தொடர்பில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்களையும் காலமாற்றத்திற்கு ஏற்ற வகையில் அதன் முக்கியத்துவத்தினையும் கவனத்தில் கொள்கின்றது. ஒட்டு மொத்தத்தில் இக்கட்டுரை இலங்கையில் குடியுரிமை தொடர்பான யாப்புசார் ஏற்பாடுகளை விபரணரீதியில் பகுப்பாய்வு செய்வதாக அமைந்துள்ளது.

**குடியுரிமை ஓர் அறிமுகம்**

குடியுரிமை என்பது பொதுவாக மேற்கத்தேய நிகழ்வாகவே கொள்ளப்படுகின்றது. நாளாந்த வாழ்வில் பயன்படுத்தப்படும் சொல்லாடலான குடியுரிமை என்பது தொடர்பில் வரைவிலக்கணம் செய்யும்போது பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. இது தொடர்பில் ஒரு பொதுவானதும் தெளிவானதுமான வரையறை காணப்படுவதில்லை. அதிகமான சிந்தனையாளர்கள் குடியுரிமை என்ற எண்ணக்கருவினை ஒரு நவீன அம்சமாகவும், குறுகியகால வரலாற்றினைக் கொண்ட ஒன்றாகவும் கருதுகின்றனர். ஒரு சில அரசியல் ஆய்வாளர்கள் பண்டைய கிரேக்க காலத்தில் முதலாவது சட்டமாக குடியுரிமை காணப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

குடியுரிமை என்பது நாட்டின் எல்லைக்குட்பட்ட பிரஜைகளுக்கு கிடைக்கப்பெறுகின்ற விசேட அந்தஸ்து ஆகும். அரசின் குடியுரிமை ஒருவருக்கு கிடைக்கப்பெறுகின்றது எனில் அவர் நாட்டின் எல்லைக்குட்பட்ட சட்ட அந்தஸ்துடைய நபர் என்பது பொருளாகும். இதன் மூலம் அந்நபருக்கு தான் குடியுரிமை வகிக்கும் நாட்டில் பாதுகாப்பு கிடைக்கும் தன்மையினை உறுதிப்படுத்தும் நிலையாகும். ஒருவருக்கு அரசியல் ரீதியான அடையாளமும் கிடைக்கப்பெறுகிறது என்பதே இதன் ஊடாக சொல்லப்படுகின்றது. தான் அங்கத்துவம் பெற்றுள்ள அரசுடன் வினைத்திறனான வகையில் அரசியல் பங்கு பற்றலுடன் ஈடுபடும் நபர்களை இது குறித்து நிற்கின்றது.

குடியுரிமை என்பது சிவில் சமத்துவத்திற்கான ஒரு நிபந்தனையாகும். அரசியல் சமூகத்தில் சகல வகையான சமூகக்கூட்டுச் செயற்பாட்டையும் அனுபவிக்கின்ற பிரஜைகளைக் கொண்டும் சமஉரிமையினைக் கொண்டும் ஒழுங்கமைந்துள்ளது. இது வெறுமனமே சமஉரிமைகளை மட்டுமே வெளிப்படுத்துவதில்லை. சமத்துவமான கடமைகளையும் உள்ளடக்கியுள்ளது (Richerd Belllary, 2010). ஓர் அரசியல் சமூகத்தினது பொறுப்புணர்வு மிக்க உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட அந்தஸ்தினை வழங்குவதனை குடியுரிமை குறித்து நிற்கின்றது. இவ்வழியில் பிரஜையானவர் ஒரு நபராக இருக்கின்றார். இவர் அரசுக்கு தனது ஆதரவினை வழங்கி மீண்டும் அரசிலிருந்து பாதுகாப்பினை பெறுகின்றார். அரசிற்கு பிரஜையானவர் தனது கடமைகளையும் கீழ்படிவினையும் வழங்கும் போது அரசானது அவருக்கு சிவில், அரசியல், மற்றும் சமூக உரிமைகளை வழங்குகின்றது. குடியுரிமையானது அரசு மற்றும் பிரஜைகளுக்கிடையிலான உறவினை இரு வழித் தொடர்பின் அடிப்படையில் கொண்டுள்ளது.

பொதுவாக குடியுரிமை என்பது பணிபுரிவதற்கான உரிமை, ஒரு நாட்டில் வாழ்வதற்கான உரிமை, அரசியல் வாழ்வில் பங்கேற்கும் உரிமை என்பவற்றோடு தொடர்புடையது. எந்தவொரு நாட்டிலும் குடியுரிமை இல்லாதவராகக் காணப்படும்

ஒரு நபர் நாடற்றவராகக் கருதப்படுவார். அந்தவகையில் குடியுரிமை என்பது சிறப்பாக ஒரு நாட்டின் குடிமகனாகவோ, குடிமகளாகவோ இருப்பதற்கான உரிமையைக் குறித்து நிற்கின்றது. குடியுரிமை என்பது தொடர்பில் அரிஸ்ரோட்டில் அவர்கள் குறிப்பிடும் போது "குடிமகன் என்பவன் ஆளுதல் மற்றும் ஆளப்படுதல் ஆகிய இரண்டு செயற்பாடுகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும் ஒருவனாவான்" என்கின்றார் (Martnez, 2013). டேவிட் மில்லர், குடியுரிமை என்பது வெறுமனே உரிமைகளைக் கொண்டிருத்தல் என்பதல்ல. கூடவே அது நம்பிக்கை மற்றும் அதன் பொதுநலனை முன்னேற்ற திடசங்கற்பம் பூண்டுள்ள சமூகத்தின் உறுப்பினரின் நடத்தையும் ஆகும்" (Miller, David, 2000). ஜக் பார்பலற் குடியுரிமை என்பது அரசியல் பிணைப்பின் தன்மையில் தங்கியுள்ளது. அப்பிணைப்பினைப் பொறுத்துத்தான் அது எவ்வளவு வேகமானது என்பது தீர்மானிக்கப்படுகிறது" (Carroll, 1947).

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து குடியுரிமை தொடர்பில் சில அடிப்படைப் புரிதல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி குடியுரிமை என்பது அரசுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இடையிலான உறவு என்றும், ஓர் அரசினுள் தனிப்பட்டவர்களுக்கு கிடைக்கப்பெறும் அந்தஸ்து என்றும், குடியுரிமை என்பது உரிமைகள் மற்றும் கடமைகளுக்கிடையிலான இடைத்தொடர்பு என்றுமாக மூன்று அடிப்படைகளில் புரிந்துகொள்ளலாம். நாடுகள் தனது நாட்டுப் பிரஜைகள் அல்லது குடிமக்கள் யார் என்பதை வரையறுத்துச் சட்டங்களை நிறைவேற்றுகின்றன. இவையே குடியுரிமைச் சட்டங்கள் என அடையாளம் காணப்படுகின்றன. குடியுரிமைச் சட்டங்கள் குடிகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் யாவை என்பதை வரையறுத்து கூறுகின்றன. அத்துடன், குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிவகைகளையும் குடியுரிமை இழக்கப்படும் வழிவகைகளையும் குடியுரிமைச் சட்டங்களே தீர்மானிக்கின்றன.

கிரேக்ககாலத்தில் குடியுரிமை என்பது அரசியல் குடியுரிமை பெறுவதே குடியுரிமை என்ற வகையில் நோக்கப்பட்டது. அங்கு பிரஜைகளுக்கு (குடியுரிமையைப் பெற்றவர்களுக்கு) அரசியல், நீதி மற்றும் நிர்வாகப் பதவிகளில் பங்குபற்றவும் நிர்வாக எடுப்புச் செயற்பாடுகளில் கலந்துகொள்ளவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இது உரிமையாக அன்றி வரப்பிரசாதத்தின் அடிப்படையிலான கடமையாகவே நோக்கப்பட்டது. இங்கு அடிமைகள், வெளிநாட்டவர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோருக்கு குடியுரிமை வழங்கப்படவில்லை. சுருக்கமாகக் கூறின் கிரேக்கத்தில் குடியுரிமை என்பது பொறுப்புக்களை வழங்குகின்ற ஒன்றாகவும், வரையறுக்கப்பட்ட ஒன்றாகவும் காணப்பட்டது. உரோமானிய காலத்தில் குடியுரிமை என்பது படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது. இக்காலத்தில் சகல மக்களுக்கும் குடியுரிமை வழங்கப்பட்டது. இக்காலத்தில் வாக்களிப்பதற்கான உரிமையும் காணப்பட்டதுடன் குடியுரிமை என்பது ஒரு சட்ட அந்தஸ்தாக நோக்கப்பட்டது. மறுமலர்ச்சி காலப்பகுதியில் அமெரிக்க புரட்சி மற்றும் பிரெஞ்சுப்புரட்சியுடன் குடியுரிமை என்பது பிரபல்யம் பெற்ற ஒன்றாக மாற்றமடைந்தது. நவீன காலத்தில் தாராண்மைவாத சந்தைப் பொருளாதார முறைமையுடன் இணைந்த வகையில் குடியுரிமை என்பது அரசின் உறுப்புரிமையை பெறுதன் ஊடாக தனது பாது

காப்பினை உத்தரவாதப்படுத்திக் கொள்ளும் ஓர் ஏற்பாடகப் பார்க்கப்படுகின்றது.

## குடியுரிமை தொடர்பான எண்ணக்கரு விளக்கம்

குடியுரிமை தொடர்பான பெரும்பாலான விளக்கங்கள் பேராசிரியர் மார்சல் (Thomas Humphrey Marshall 1893-981) என்பவராலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. இவரே நவீனகால குடியுரிமை தொடர்பான சமூகவியல் பகுப்பாய்வினை மேற்கொண்ட சமூகவியலாளராவார். இவர் இலண்டன் பொருளாதார விஞ்ஞான நிறுவனத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் பல்வேறு விதமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் குடியுரிமை தொடர்பாக் கூறும்போது "குடியுரிமை என்பது ஒரு சமூகத்தின் முழுமையான அங்கத்தவராகவுள்ள அத்தகைய அனைவருக்கும் வழங்கப்படும் ஓர் அந்தஸ்தாகவுள்ளதுடன் அத்தகைய அந்தஸ்தினை உடையவர்கள் அதனோடு இணைந்த உரிமைகள் மற்றும் கடைமைகள் தொடர்பில் சமமானவர்களாவர் (Bellamy, 2008: 12). அதாவது குடியுரிமை என்பது மக்களினால் பரிபூரண அங்கத்துவத்தினைக் கொண்டிருக்கும் சாராருக்கு வழங்கப்படும் தகுதியாகும். இத்தகுதியைப் பெறுகின்ற அனைவரும் அத்தகுதியோடு கிடைக்கப் பெறுகின்ற உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பில் சமமான உரித்துடையவர்களாகின்றனர் என்கிறார்.

இவரது வாதப்படி குடியுரிமையானது

- "நபரொருவருக்கு அரசியல் ரீதியான அங்கத்துவம் பெற்றுக் கொள்ளப்படுவதால் பெறப்படுகின்ற அரசுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உறவாகும்."
- குடியுரிமை எனும் தகுதி கிடைக்கப் பெறும் அனைவரும் ஒரே சமமான உரிமைகள் பொறுப்புணர்வுடையவர்கள் என்பதாகும்.

மேற்படி இரண்டு பிரதான தாராண்மைவாதச் சிந்தனைகளை தன்னுள்ளே கொண்டுள்ளது. (Mead, 1997: 28). ரீ. ஏச். மார்ஷ்சல் Citizenship and Social Classes எனும் தனது நூலில் குடியுரிமை என்பது "முழுமையான உறுப்புரிமை பெற்றவர்களிடையே பகிரப்படுகின்ற அந்தஸ்தாகும். அவ் அந்தஸ்துக்கு உட்பட்டவர்கள் கிடைக்கப் பெறும் உரிமைகள், கடமைகள் தொடர்பில் சமமானவர்கள்" என்கின்றார். குடியுரிமை என்பது அரசியல் பங்கு பற்றுல்கள், அரிசியல் உரிமைகள் மற்றும் கடமைகள் என்பனவற்றுடன் மிகநெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளதனைக் காணமுடிகின்றது. 1940களில் சமூகத்தில் காணப்பட்ட குடியுரிமை தொடர்பாக குறிப்பிடும் போது மதிப்பு மற்றும் சமூகத்தில் காணப்படும் சமமின்மையால் கட்டியெழுப்பப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். இச்சூழலை மையமாகக் கொண்டு ரீ. ஏச். மார்சல் நான்கு பிரதான வினாக்களை எழுப்பியுள்ளார்.

1. போட்டி நிறைந்த சந்தையில் சுதந்திரம் இல்லாமல் அடிப்படைச் சமத்துவம் கட்டியெழுப்பப்படுமா?
2. சமூகமயமாக்கம் மற்றும் சந்தையினுடைய துணைவிளைவுகளால் என்ன தாக்கம் ஏற்பட்டது.?
3. ஒருவரின் கடமையில் இருந்து உரிமைக்கு மாற்றப்படும் போது எவ்வாறான தாக்கம் ஏற்படும்?
4. சமூக சமநிலையை ஏற்படுத்த நவீன வரையறை ஏதும் இருக்கின்றதா?

மேற்குறிப்பிட்ட வினாக்களை அடிப்படையாகக்கொண்டு மார்ஷல் குடியுரிமை

தொடர்பில் 3 விதமான வகையில் வரையறை செய்கின்றார். இவர் சமூக உரிமைகள் பிரஜைகளுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் சமூகக் குடியுரிமையில் கூடுதலான முக்கியத்துவத் தினைக் கொடுத்துள்ளார். இதன்படி குடியுரிமை என்பது அரசிற்கும் அதன் உறுப்பினர்களுக்குமிடையிலான உறவு என்றும் ஓர் அரசில் தனிப்பட்ட நபருக்குக் கிடைக்கும் அந்தஸ்து என்றும் குறிப்பிட முடியும். ஒவ்வொரு நாடும் தன்னுடைய குடிமக்கள் யார் என்று அடையாளப்படுத் துவதற்காகக் குடியுரிமைச்சட்டங்களை நிறைவேற்றுகின்றன. இவை குடிமக்களது கடமைகளையும், உரிமைகளையும் வரையறுப்பனவாகக் காணப்படுகின்றன.

**சுதந்திரத்திற்கு முன்னரான இலங்கையின் குடியுரிமை**

போத்துக்கேயர்கள் இலங்கையைக் கைப் பற்றியது முதல் இலங்கை சுதந்திரமடைவது வரையில் மாறி மாறி அந்நியராட்சிக் குட்பட்டிருந்தது. போத்துக்கேயர்களும் ஒல்லாந்தர்களும் இலங்கையின் வர்த்தக நடவடிக்கையிலேயே கவனம் செலுத்தி னார்கள். அரசியல் கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதிலோ ஒரு சீரான நிர்வாக ஒழுங்கமைப்புக்களை முன்னெடுப் பதிலோ கவனம் செலுத்தவில்லை. பிரித்தானியர்களது காலணித்துவ ஆட்சிக் காலத்திலேயே இலங்கையில் ஒழுங்கமைக் கப்பட்ட அரசியல் கட்டமைப்பு உருவாக்கப் பட்டது. இக்காலப்பகுதியில் இவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட கோல்புறுக் கமரன்யாப்பு, குறுக்மக்கலம்யாப்பு, மனிங்யாப்பு, மனிங்டிவன்சியர்யாப்பு, டொனமூர்யாப்பு மற்றும் சோல்பரியாப்பு போன்ற அரசியல் சீர்திருத்தங்களுக்கூடாக இலங்கை படிப்படியாக அரசியல் கட்டமைப்புக்களுக்கு பழக்கப்பட்டிருந்தது. பிரித்தானியரது ஆட்சிக்கு முன்னர் இலங் கையில் குடியுரிமை என்பது யாப்புறுப் படுத்தப்பட்ட ஒன்றாக காணப்படவில்லை. பிரித்தானியரது ஆட்சிக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்புசார் சீர்திருத்தங்கள் இலங்கையில் குடியுரிமை தொடர்பான சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அடித்தளமிட்டன. குறிப்பாக 1910 மற்றும் 1931ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை முறைமை கள் இதனை எடுத்துக்காட்டுகின்றன. இவை இதுவரை காலமும் கல்விகற்ற சொத்துடைய வர்க்கத்தினரிடம் காணப்பட்ட வாக்குரிமை படிப்படியாக பாமரமக்களது கைகளிற்கு மாற்றப்படுவதற்கு காரணமாக அமைந்தது.

மிக ஆரம்பகாலங்களில் பிரித்தானியரது குடியேற்ற ஆட்சி நடைபெற்ற நாடுகளில் மக்கள் எல்லோரும் பிரித்தானியக் குடிகள் என்றே மதிக்கப்பட்டு வந்தனர். இக்காலப் பகுதியில் இலங்கையர்கள் கூட பிரித்தானிய குடிகளாகவே கருதப்பட்டனர். 1890ம் ஆண்டின் 21ம் இலக்க குடிமக்களாக்கல் கட்டளைச்சட்டம் வெளிநாட்டவர்களை குடிமக்களாக்கும் ஏற்பாடுகளை உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்பட்டது. இதன்படி இலங்கையில் உண்மையிலேயே குடியமர்ந்திருந்த எந்தவொரு வெளி நாட்டவருக்கும் பிரித்தானிய ஆட்சிக்குட் பட்டவர்களுக்கு உரித்தான உரிமைக ளையும், சிறப்புக்களையும் தேசாதிபதியிடம் கோரக்கூடியதாக இருந்தது. (DIESL, 2018: 5) இதன் மூலம் சகலருக்கும் பாகுபாடின்றி சமமான குடியுரிமை வழங்கப்பட்டது. பின்னர் காலத்திற்கு காலம் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களின் ஊடாக இவை மேலும் முனைப்பு பெற்றன.

இக்காலப்பகுதியில் காணப்பட்ட குடியுரி மை முறைமையினை ஒரு முழுமையான குடியுரிமையாகக் கொள்ளமுடியாது.

ஏனெனில் குடியுரிமையின் பிரதான அம்சங்களான அடிப்படை உரிமைகள் மற்றும் கடைமைகள் என்பன பிரித்தானியரது ஆட்சிக்காலப்பகுதியில் இலங்கை பிரஜைகளுக்கு மறுக்கப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டது. ஆயினும் அடிப்படை உரிமைகளை வென்றெடுத்து முழுமையான குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற மனோநிலையை விட பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற அவாவே இலங்கைப் பிரஜைகளிடம் அதிகம் காணப்பட்டது. ஆயினும் இலங்கை பிரித்தானிய காலணித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரமடைந்த பின்னர், இதுவரை காலமும் பிரித்தானிய குடிமக்களாக அடையாளப்படுத்தப்பட்ட நிலைமாறி இலங்கைப் பிரஜையாக தம்மை அடையாளப்படுத்துவதற்கும் தமக்குரிய உரிமைகள் மற்றும் கடைமைகளை வரையறுப்பதற்கான ஒரு தேவைப்பாடு ஏற்பட்டது. இதற்கு சுதந்திரத்திற்கு பிற்பட்ட அரசியல் யாப்புக்கள் அடி அத்திவாரமிட்டன.

### சுதந்திரத்திற்கு பிற்பட்டகால அரசியல் யாப்புக்களும் குடியுரிமை பற்றிய ஏற்பாடுகளும்

#### சோல்பரி அரசியல் யாப்பு

சோல்பரி யாப்பு இலங்கையின் குடியுரிமை வளர்ச்சியில் முக்கிய மைல்கல்லாகும். இந்தயாப்புசார் ஏற்பாடுகளின் ஊடாக இலங்கை பிரஜைகள் தங்களை தாங்களே ஆளக்கூடிய நிலை உருவாகியது. இது நேரடியாக குடியுரிமை மற்றும் அடிப்படை உரிமைகளின் வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இருப்பினும் இக்காலத்தில் குடியுரிமைக்கு சவாலை ஏற்படுத்தும் பல்வேறு ஏற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சோல்பரி யாப்பின் 29 ஆம் சாரத்தின் 2,3,4ஆம் உப பிரிவுகளில் எல்லா இன பிரிவினருக்கும் சம பிரதிநிதித்துவம் காணப்படுவதனை உறுதி செய்திருந்தது. அதாவது சிறுபான்மையோருக்கான ஒரு பாதுகாப்பு ஏற்பாடாகக் காணப்பட்டது. ஆயினும் 1948ல் இலங்கை குடியுரிமை சட்டம், 1949ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் என்பன வர்க்கம், இனவாதம் என்ற இரு அடிப்படைகள் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்படுவதில் தாக்கம் செலுத்தியது.

1948ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் 18ஆம் இலக்க இலங்கை பிரஜாவுரிமைச் சட்டமானது பிறப்பின் மூலம் பிரஜாவுரிமை பெற்றவர்கள், பதிவின் மூலம் பிரஜாவுரிமை பெற்றவர்கள் என்ற இருவகையினரைத் தோற்றுவித்தது. இலங்கை குடியுரிமைச் சட்டத்தின் முதல் பகுதி பிறப்பின் மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கை பிரஜை என்ற அந்தஸ்தைப் பெறலாம் எனக் கூறுகின்றது. சட்டத்தின் இரண்டாம் பகுதி பிறப்பின் மூலமான பிரஜாவுரிமையைப் பற்றி விளக்குகின்றது. இதன்படி, பிறப்பின் அடிப்படையில் ஒருவர் குடியுரிமை பெறுவதற்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

1. 1948ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையில் பிறந்திருந்தால் அவரது தந்தை அல்லது தந்தை வழிப்பாட்டனும் முப்பாட்டனும் இலங்கையில் பிறந்திருத்தல் வேண்டும்.

2. 1948ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு வெளியே பிறந்திருந்தால் அவரது தந்தையும், தந்தை வழிப்பாட்டனும் அல்லது முப்பாட்டனும் இலங்கையில் பிறந்திருத்தல் வேண்டும்.

3. 1948ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் இலங்கையில் பிறந்திருந்தால் பிறப்பின்போது அவரது பெற்றோரில் ஒருவர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4. குறிப்பிட்ட திகதி அல்லது அதற்குப் பின்னர் இலங்கைக்கு வெளியில் பிறந்திருந்தால் அவரது பெற்றோரில் ஒருவர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டியதுடன், அந்த நாடுகளில் அமைந்த இலங்கைத் தூதரகங்களில் இப்பிறப்பு குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவுசெய்யப் பட்டிருக்க வேண்டும் (Citizenship Act No.18 of 1948).

சட்டத்தின் மூன்றாவது பகுதி, பதிவின் மூலமான பிரஜாவுரிமை பற்றிக் குறிப்பிடுகின்றது. பதிவின் மூலம் ஒருவர் குடியுரிமையைப் பெறுவதற்கு அவர் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. குடியுரிமைக்கு விண்ணப்பம் செய்பவரின் தாயார், விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க முன் அல்லது விண்ணப் பிக்கும் போது இலங்கையின் மரபுவழிப் பிரஜையாகவும், விண்ணப்பிப்பவர் விண்ணப்பம் செய்யும் திகதியிலிருந்து மணம் முடித்தவராயின் ஏழு வருடங்களும், மணம் முடிக்காதவராயின் பத்து வருடங்களும் இலங்கையில் வசித்திருத்தல் வேண்டும். அல்லது விண்ணப்பதாரரின் தந்தை இலங்கை மரபுவழி பிரஜாவுரிமையைப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரரின் வாழ்க்கைத்துணை இலங்கையின் மரபுவழி அல்லது பதிவுக் குடியுரிமையைப் பெற்று விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் திகதிக்கு முந்திய ஒரு வருடத்துக்கு இலங்கையில் வாழ்ந்திருத்தல் வேண்டும். அல்லது,

3. விண்ணப்பதாரர் இலங்கையின் மரபுவழிக் குடியுரிமையுடையவராயிருந்து பின்பு வேறொரு நாட்டின் குடியுரிமை பெற்றதால் அதனை இழந்து விண்ணப் பிக்கும்போது வேற்றுநாட்டுக் குடியுரி மையை கைவிட்டவராக இருத்தல் வேண்டும் (Citizenship Act No.18 of 1948).

இதன்படி இலங்கையில் ஏழு இலட்சத் திற்கும் அதிகமான இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குடியுரிமை மறுக்கப்பட்ட துடன் அவர்கள் நாடற்றவர்களாகவும் மாறினர்.

இலங்கை குடியுரிமை வரலாற்று வளர்ச்சியில் அடுத்த முக்கிய கட்டமாக அமைவது இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட 1949ஆம் ஆண்டின் மூன்றாம் இலக்க இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டமாகும். 1948 பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு ஏற்ப குடியுரிமை தொடர்பில் சட்டவாக்கம் செய்யும் அதிகாரம் இலங்கைப் பாராளு மன்றத்துக்கு உரியது. இவ் ஏற்பாட்டுக்கு அமைவாக 1949ஆம் ஆண்டு மூன்றாம் இலக்க இந்திய பாகிஸ்தானிய குடியிருப்பாளர் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு, 1949 ஆகஸ்ட் 5ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப் பட்டது. (Indian and Pakistani Residents (Citizenship) Act No. 3 of 1949). இச் சட்டத்துக்கு ஏற்ப இலங்கைப் பிரஜாவுரி மையை பெற்றுக்கொள்வதற்கு திருமணமா காத அல்லது விவாகரத்துப் பெற்ற இந்திய அல்லது பாகிஸ்தானியருக்கு 1946 ஜனவரி முதலாம் திகதிக்கு உடன் முந்திய பத்து வருடங்கள் இடையறாத வதிவு இருந்திருப்பினும், திருமணமானவரெனில் 1946 ஜனவரி முதலாம் திகதிக்கு உடன் முந்திய ஏழு வருடங்கள் இடையறாத வதிவு

இருந்திருப்பினும், அன்றைய தினத்தில் இருந்து விண்ணப்பப்பத்திர திகதி வரை இலங்கையில் தொடர்ச்சியாக வதிவு இருந்திருப்பினும் அவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை பெற விண்ணப்பிக்க முடியும். 1949 ஓகஸ்ட் 5ஆம் திகதியிலிருந்து இரண்டு வருடத்துக்குள் குடியுரிமை கோரி விண்ணப்பிக்க வேண்டும். அத்துடன் குடியுரிமை கோரி விண்ணப்பிப்பவர்கள் நியாயமான வருமான மட்டத்தை பெறுபவர்களாகவும் காணப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன. குடியுரிமை விண்ணப்பங்களை ஏற்க அல்லது நிராகரிக்க மகாதேசாதிபதி அதிகாரம் பெற்றிருந்தார். விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அதற்கான காரணத்தை மகாதேசாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் (Indian and Pakistani Residents (Citizenship) Act No. 3 of 1949).

1948இல் கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தில் காணப்பட்ட இறுக்கமான நிபந்தனைகளைத் தளர்த்தும் நோக்கி னையும் இச்சட்டம் கொண்டிருந்தது. வெளிவாரியாகச் சட்டம் இத்தகைய நோக்கங்களைக் கொண்டிருந்தாலும் கூட யதார்த்தத்தில் அது இந்தியத் தமிழர் களுக்கு எதிரானதாக அல்லது பாரபட்ச மாகவே அமைந்தது எனலாம். இச்சட்டம் பாமரமக்களால் புரிந்துகொள்ளமுடியாத சிக்கலான ஏற்பாடுகளையும் தொடர்ந்தும் இறுக்கமான நிபந்தனைகளையுமே கொண்டிருந்தது என்பது யதார்த்தமாக விருந்தது. இதனை விட குடியுரிமை கோரி விண்ணப்பிப்பதற்கான காலஎல்லையும் குறுகியதாகவே காணப்பட்டமை இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதில் பாதிப்பினை ஏற்படுத்தியது.

1964 ஒக்டோபர் 30ஆம் திகதி இந்தியப் பிரதம மந்திரி லால் பகதூர் சாஸ்திரி (Lal Bahadur Shastri) மற்றும் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருக் கிடையில் இடம்பெற்ற சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் தாயகம் திரும்பிய 525,000 இந்தியத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டது. மேலும், 300,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும் என்றும், எஞ்சிய 150,000 இந்தியத் தமிழர்களின் பிரஜாவுரிமை பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் உடன்படிக்கை அடையப்பெற்றது. (Meal: 2018). 1967ம் ஆண்டு 14ம் இலக்க இந்திய - இலங்கை உடன்படிக்கைச்சட்டம் நிறை வேற்றப்பட்டது. இதன்படி இந்திய வம்சாவளியினரைப் பதிவுசெய்ய திணைக் களம் நிறுவப்பட்டது.

1948 குடியுரிமைச் சட்டம் தொடர்பாக வி.நித்தியானந்தன் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். "வெளிப்படையாக தெரிவது போல் இலங்கையில் குடியுரிமை வரையறை செய்வதல்ல. அதற்குப் பதிலாக, முதலாளி வர்க்கத்தின் இரட்டை நிலையினை பொருளாதார, அரசியல் மட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு கருவியாக அவற்றைப் பயன்படுத்துவதேயாகும்."

வீழ்த்துவதற்கும் குடியுரிமைச் சட்டங்கள் உதவின. ஒரு புறம் அரசியல் ரீதியாக, ஒரு சிறுபான்மை இனம் என்ற வகையில் தென்னிந்திய தோட்டத் தொழிலாளர்களோ அல்லது அவர்கள் மத்தியில் ஆதரவு பெற முனையும் அரசியற் கட்சிகளோ, தமக்கெதிராகக் கிளர்ந்தெழுவதை முளையிலே கிள்ளியெறியக்கூடியதாக இருந்தது. மறுபுறம் பொருளாதார ரீதியாக முதலாளிவர்க்கத்தின் உற்பத்தி அலுவல்களுக்கான ஊழியத்தை வழங்கிக்

கொண்டிருந்த சாரரின் அடிப்படை அரசியல் உரிமையைப் பறித்துக் கொண்டதன் மூலமாக அவர்களை நசுக்குவது ஒப்பீட்ட ளவில் இலகுவானது. தம் பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கு ஏதுவான கோரிக்கைகளை முன்வைக்கக் கூடிய ஒரு முறையில் தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் அரசியல் பலம் அதன் மூலம் தொழிலாளர்வர்க்கத்திற்கு இல்லாமல் போயிற்று என்று கூறியுள்ளார்.

அரசியல் யாப்பின் 29/II உறுப்புரை சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஏற்பாட்டினை கோடிட்டு காட்டியது. இதன் மூலம் சிறுபான்மை மக்களின் உரிமைகளை நிலைநாட்டவும் பெரும்பான்மையோர் சிறுபான்மையோரின் மதம், மொழி போன்ற விடயங்களில் தலையிடும் போது அதனை தடுத்து நிறுத்தும் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இது பிரஜைகளின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் ஏற்பாடாககாணப் பட்டாலும் இவ்வரசியல் யாப்பு நடைமுறை யில் இருந்த காலத்தில் சிறுபான்மையின மக்களின் உரிமைகளுக்கு சவால் விடக் கூடிய பல்வேறு விடயங்கள் நடை முறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தனிச்சிங்கள சட்ட விவாதத்தின் போது கொல்வின் லெஸ்ஸி என்பவர் “சிங்கள மொழியை ஏற்கும் படி நிர்ப்பந்தித்தால் இனக்கலவரத்தக்கு வழிவகுக்கும் எனவும், சிறுபான்மையோர் தமக்கு அநியாயம் நடப்பதாக உணர்ந்தால் அவர்கள் தனியாக பிரிந்து போகக்கூட தீர்மானிக்கலாம்” எனவும் கூறியுள்ளார். பிற்பட்ட காலங்களில் தமிழ்மொழி அரச கரும மொழியாக வடகிழக்கு பகுதிகளில் கொண்டு வரப்பட்ட போதிலும் அவை போதியளவு நன்மை பயப்பதாக காணப்படவில்லை. அத்தோடு இந்திய தமிழர், இலங்கையில் ஏனைய பகுதிகளில் பரந்து வாழும் முஸ்லிம்கள் போன்றோர் அரசகரும மொழியாக சிங்களத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலைப்பாடு இன்று வரை தொடர்கின்றது. வடகிழக்கு தவிர ஏனைய பகுதிகளில் வாழும் சிறுபான்மையோரின் மொழி பற்றிய உரிமை கவனத்தில் எடுக்கப்படாமையும் தற்காலத்தில் முக்கிய பிரச்சினையாக உருமாறியுள்ளது. இருப்பினும் நாட்டின் சுதந்திரம், மக்கள் இறைமை, 29ஆம் சரத்து பொதுசேவை ஆணைக்குழு, செனட்சபை, நியமன உறுப்பினர்கள் போன்றன குடியுரிமையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியதுடன் தங்களை தாங்களே ஆளக்கூடிய நிலை இக்காலத்தில் உருவாக்கப்பட்டது.

**முதலாம் குடியரசு அரசியல்யாப்பு**

இலங்கை மக்களால் வரையப்பட்ட முதலாவது அரசியல் யாப்பாக 1972ஆம் ஆண்டு யாப்பு காணப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தில் 67ஆம் உறுப்புரை குடியுரிமைச் சட்டங்கள் பற்றி குறிப்பிடுகின்றது. யாப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னுள்ள குடியுரிமை தொடர்பான சட்டங்கள் மற்றும் பிரஜைகளின் உரிமைகள் குறித்த ஏற்பாடுகள் தொடர்ந்தும் நிலைத்திருக்கும் என்பதை வலியுறுத்தியது (DGP, 1972:36). இதனால், முதலாம் குடியரசு அரசியல் திட்டம் 1948ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தையும் அதன் பின்னரான சட்ட வாக்கங்களையும் தொடர்ந்தும் பாதுகாத்தது.

ஆயினும் இவ் யாப்பில் பிரஜைகளின் உரிமைகளை வலுப்படுத்தும் பொருட்டு பல்வேறு ஏற்பாடுகளை உள்ளடக்கி யிருந்தது. அரசியல் யாப்பின் 18ஆம் சரத்தின் முதலாவது பிரிவு அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் உள்வாங்

கப்பட்டமையால் மனித உரிமைகளை அனுபவிக்கக் கூடிய வாய்ப்பு குடிமக்களுக்கு ஏற்பட்டது. இவ்வடிப்படை உரிமைகள் பிரஜைகளின் உரிமைகளை நிலை நாட்டுவதில் முக்கிய காரணமாக இருந்தாலும் உரிமைகள் மீதான மட்டுப்பாடு (18ஆம் சரத்தின் 2பிரிவு) உரிமைகளை முழுமையாக அனுபவிக்கமுடியாத ஏற்பாடாக உள்ளது. அத்துடன் ஆட்கள், பிரஜைகள் என்ற ஏற்பாடு காணப்பட்ட மையானது சொந்தநாட்டு பிரஜைகள் மீது காட்டப்படும் பாரபட்சமாக அமைந்தது. அவசரகால தடைச்சட்டத்தின் காரணமாக சாதாரண மக்கள் சுதந்திரமாக உரிமைகளை அனுபவிக்க முடியாத நிலை காணப்பட்டது. பிரஜாவுரிமையற்றிருந்த இந்திய தமிழர் தொடர்பில் இவ் யாப்பு அமுலில் இருந்த காலத்தில் ஆக்கபூர்வ மாக எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்பட வில்லை. குழுவுரிமைகள் உட்பட, பிரஜைகளின் உரிமைகளையும் சுதந்திரமாக அனுபவிக்கும் சூழலை உருவாக்கி கொடுத்தல், தொழில் செய்யும் உரிமைகளை எல்லா பிரஜைகளுக்கும் வழங்குதல், மத உரிமைகளை அனுபவித்தல், மொழி சுதந்திரத்தை அனுபவித்தல் போன்ற ஏற்பாடுகள் யாப்பில் கூறப்பட்டிருந்தாலும் நடைமுறையில் அத்தியாயம் இரண்டு, அத்தியாயம் மூன்று என்பன பௌத்த மதத்திற்கும் சிங்கள மொழிக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளமையானது சிறுபான்மையினங்களின் உரிமையை மீறுவதாகக் காணப்பட்டது. இது இனமுரண் பாட்டுக்கும் வித்திட்டது. இருப்பினும் சுதந்திரமான தேர்தல், அடிப்படை உரிமைகள், மக்கள் ஜனநாயகம், நீதிமன்றத்தின் தோற்றம், அரசசேவை, பொதுச்சேவை ஆணைக் குழுக்களின் தோற்றம் என்பன பிரஜைகளின் உரிமைகளின் வளர்ச்சிக்கு மைல்கல்லாக அமைந்தது.

### 1978ம் ஆண்டு அரசியல் யாப்பும் குடியுரிமையும்

பிறப்பின் மூலமான பிரஜா உரிமை மற்றும் பதிவின் மூலமான பிரஜா உரிமை என்ற இரண்டு வகையான உரிமைகளையும் நீக்கி இலங்கைப் பிரஜை என்ற அந்தஸ்தினை இவ் அரசியல் திட்டம் வழங்கியது. இவ்அரசியல் திட்டத்தில், பிரஜைகளின் நலனை மேம்படுத்தவும், குடிமக்களின் உரிமைகளை அனுபவிப்பதோடு மாத்திர மல்லாமல் உரிமைகளை உத்தரவாதப் படுத்தக்கூடிய செயற்பாடுகள் இவ்யாப்பில் உள்ளடக்கபட்டமை விசேட அம்சமாகும். அரசியல் யாப்பின் மூன்றாம் அத்தி யாயத்தின் (10-14) வரையான உறுப்புரைகள் அடிப்படை உரிமைகள் தொடர்பாக கூறுகின்றன. அத்துடன் உரிமைகளை உத்தரவாதப்படுத்தப்படுத்தக்கூடிய பொறி முறைகள் இவ்வரசியல் யாப்பில் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவ் வகையில் உயர்நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு, ஒம்புட்ஸ்மன் என்பன அறிமுகப்படுத்தப்பட்டதால் பிரஜைகளின் உரிமைகள் உத்தரவாதப் படுத்தப்பட்டது. அத்தியாயம் 3இல் அடிப்படை உரிமைகள் எழுத்துருவம் பெற்றுக் காணப்படுவதுடன் அதனை அனுபவிப்பதற்கான சூழல் அவற்றை உத்தரவாதப்படுத்தும் சூழல் இவ் யாப்பில் ஏற்படுத்தப்பட்டன.

எனினும் 1980களில் குடியுரிமைப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் எதிர்கொண்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அழுத்தங்கள் காரணமாக நாடற்று இருக்கும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் குடியுரிமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இதனால் இலங்கை அரசாங்கம் 1986 இன்

05ஆம் இலக்கமுடைய நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமையை வழங்கல் சட்டத்தை கொண்டுவந்து எஞ்சிய 94,000 பேருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமையை வழங்க முன்வந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தங்களின் கீழ் இந்திய பிரஜாவுரிமை வழங்கப்படவிருந்த ஆனால், அதற்கு விண்ணப்பிக்காத அதேவேளை இலங் கையின் பதிவின் மூலமான பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்திருந்த 94,000 பேருக்கு குடியுரிமை வழங்குவது என இச்சட்டத்தின் ஊடாகத் தீர்மானிக்கப்பட்டது. (Grant of Citizenship to Stateless Persons Act, No. 5 of 1986).

நாடற்றவர்களின் பிரச்சினை தொடர்ந்தும் நீடித்துக்கொண்டே சென்றமையால் அரசாங்கம் 1988இல் மீண்டும் ஒரு சட்டத்தை கொண்டுவந்து நிறைவேற்றியது. இச்சட்டத்தின் நோக்கம் முன்னைய சட்டங்களின் கீழ் குடியுரிமையைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ள நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுப் பதாகும். இச்சட்டம் 1988ஆம் ஆண்டின் நாடற்றோருக்கு பிரஜாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என பெயரிடப் பட்டது. இந்தியாவில் பிறந்த, இலங்கையில் சட்ட ரீதியாக வசித்து வருகின்ற நாடற்ற அனைவருக்கும் இச்சட்டம் செயற்படத் தொடங்கிய நாளிலிருந்து அதாவது 1988.11.11 முதல் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும் என மேற்படி சட்டம் எடுத்துரைத்தது. எனினும், 1986இல் உடன்பாட்டின் கீழ் இந்திய பிரஜாவுரிமை கோரி இந்தியத் தூதரகத்திடம் விண்ணப் பித்துள்ளோருக்கும், 1964 ஒக்டோபர் 30இல் பின்பு பிறந்த அவர்களின் பிள்ளைகளுக்கும் இச்சட்டத்தின் கீழ் குடியுரிமை பெறுவது விலக்கப்பட்டிருந்தது (DIESL, 2018). குடியுரிமை விண்ணப்பம் கிடைக்கப்பெற்று அறுபது நாட்களுக்குள் குடியுரிமைச் சான்றிதழ் கிடைக்கப்பெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1964 ஒக்டோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள் தொடர்பிலும் இச்சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்பட்டன. அதாவது, 1967ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இந்திய இலங்கை உடன்படிக்கை அமுலாக்கல் சட்டத்தின் கீழ் 469,000 பேரினுள் குடியுரிமை சான்றிதழ் கிடைக்கப்பெறாத நபர்களுக்கு குடியுரிமை வழங்கும் அதிகாரம் ஆணையாளருக்கு இருந்தது.

எனினும், இச்சட்டமும் குடியுரிமை தொடர்பில் நிலவிய பிரச்சினைக்கு முழுமையான தீர்வினை வழங்கவில்லை. 1986 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க மற்றும் 1988ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க சட்டங்களின் கீழ் இந்திய குடியுரிமை பெற விண்ணப்பித்திருந்த அதிகளவான இந்திய வம்சாவளி தமிழர்களுள் ஒரு பகுதியினர் இந்தியக் குடியுரிமை பெறாமலும், பிறிதொரு பகுதியினர் குடியுரிமை பெற்ற போதிலும் தொடர்ந்தும் இலங்கையில் வசிப்பவர்களாகவும் இருந்தனர். (DGP, 2003). 1984இல் அதிகரித்து வந்திருந்த உள் நாட்டுப் போரின் காரணமாக இந்தியா வுக்கும் இலங்கைக்கும் இடையேயான படகுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இத்தகைய பின்னணியில் இலங்கையில் தங்கியிருந்த நாடற்ற இந்தியவம்சாவளி தமிழ் மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கும் பொருட்டு 2003 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்கச் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்துக்கு அமைய 1964 ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் இலங்கையில் நிரந்தரமாக வசித்து வருகின்றவர்கள் அல்லது அவர்களின் வழித்தோன்றல்களுக்கு இச்சட்டம்

தொடங்கிய திகதியில் (2003.11.11) இருந்து இலங்கைப் பிரஜை அந்தஸ்து வழங்கப் படும் எனவும், அவர்களுக்கு இலங்கைப் பிரஜைகளுக்கு உரித்தான உரிமைகள் அனைத்தும் கிடைக்கப்பெறும் எனவும் வெளிப்படுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கம் 2009ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினை நிறைவேற்றியதன் மூலமாக 2003 சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க முடியாதுள்ள இந்திய அகதி முகாம்களில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு பிரஜாவுரிமை பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் மீதான திருத்தம் ஆகும். இச்சட்டத்துக்கு ஏற்ப 1964 ஒக்டோபர் 30ஆம் திகதி இலங்கையில் வசித்த ஆனால் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங் களால் இலங்கையை விட்டுச் சென்று இந்தியாவில் வசித்தவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை பெற்றுக்கொள்ள முடியும் (DGP, 2009).

அவசரகால தடைச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம், உரிமைகள் மீதான மட்டுப் பாடுகள் என்பன பிரஜைகளின் உரிமைகளை அனுபவிப்பதில் சிக்கலை ஏற்படுத்துகின்றது. அத்துடன் அரச மதமாக பௌத்தம் காணப்படுவதால் சிறுபான்மை மக்கள் சந்தேகம் கொள்வதுடன் தாம் இந்நாட்டின் இரண்டாந்தர பிரஜைகள் என்ற எண்ணத்தில் வாழ்கின்றனர். அத்துடன் வளப்பகிர்வு, ஆசனப்பகிர்வு, கல்வி என்பவற்றில் பாரபட்சம் காட்டியுள்ளது. இரண்டாம் உலகமகா யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கைக்கு இடம்பெயர்ந்த சீன வம்சாவளியினர் இலங்கையில் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின் மூலம் நாடற்றவர்களாக மாறினர். இதனால் 2008ஆம் ஆண்டு வரை நாடற்றவர்களாக இருந்த சீன வம்சாவளியினருக்கு 2008ஆம் ஆண்டின் 38ஆம் இலக்கமுடைய சீன வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டத்தினூடாக பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. 1948 நவம்பர் 15ஆம் திகதி முதல் அதாவது பிரஜாவுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது முதல் இலங்கையில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள சீன வம்சாவளியினருக்கு அல்லது அவர்களின் வழித்தோன்றலாக அப்போது இலங்கையில் வசித்தவர்களுக்கு இச்சட்டத்தின் கீழ் குடியுரிமையை பெற்றுக் கொள்ளலாம். இதன்கீழ் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் 2008 ஒக்டோபர் 31ஆம் திகதியிலிருந்து அதாவது சட்டம் நடை முறைக்கு வந்த நாளிலிருந்து ஐந்து வருட காலத்துக்குள் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி விண்ணப் பிக்கலாம் என்று சட்டம் நிறைவேற்றப் பட்டது (DGP, 2009).

### தற்கால இலங்கை குடியுரிமை தொடர்பான விமர்சன நோக்கு

இலங்கையில் சமகாலத்தில் குடியுரிமை தொடர்பாக அதிகளவு பேசப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் இலங்கையின் இனமுரண்பாட்டில் குடியுரிமை அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்த சொல்லாக காணப்பட்டமையாகும். சமத்துவ கொள்கை யின் அடிப்படையில் பிரஜைகளின் உரிமையினை வழங்குவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தமுடியும் என சமகால அரசாங்கம் அதிகளவில் கவனத்தில் கொள்கின்றது. மக்களின் உரிமைகளை அனுபவிப்பதற்கான முக்கிய மான செயற்பாடுகளை நடைமுறைப்படுத் தியுள்ளமை இதற்குச் சான்றாகவுள்ளது.

இன்றுவரை இலங்கையில் முறையான குடிம சமூகத்தினைக் கட்டியெழுப்ப முடியவில்லை. இதற்கு இன, மதவாத சக்திகள் தொடர்ந்தும் தடையாக இருந்து வருகின்றது. அத்துடன் வரலாற்று காரணங்களை காரணம் காட்டி சிறுபான்மையினரின் உரிமை தொடர்பில் கேள்விகளை எழுப்புகின்றனர். சில பௌத்த அமைப்புக்கள் இலங்கையில் பூர்வீககுடி சிங்களவர்களே என்பதால் ஏனைய இனங்கள் அவர்களை அனுசரித்தே செல்ல வேண்டும் என ஊடகங்களுக்கு தொடர்ந்தும் அறிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றன. சமகாலத்தில் கருத்து வெளியீட்டு சுதந்திரம், ஊடகசுதந்திரம், மத உரிமை, நடமாடும்உரிமை போன்ற அனைத்து உரிமைகளை அனுபவிப் பதற்கான சூழல் இலங்கையில் காணப்பட் டாலும் சிறுபான்மையினரின் தேவைகள் மற்றும் விருப்பங்கள் இன்னும் தேக்க நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. ஆட்கடத்தல், வன்முறை போன்ற சம்பவங்கள் தொடந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் அரசியல் தலைவர்களின் சுயநலம் மற்றும் அரசியல் இலாபம் கருதி குடியுரிமையினை பறிப்பதையும் மீண்டும் வழங்குவதையும் வழக்கமாக கொண்டிருக் கின்றனர். அவ்வகையில் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேக்காவின் குடியுரிமையைப் பறித்தது குறிப்பிடத்தக்கது. 2015ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த புதிய நல்லாட்சி அரசாங்கம் அவரின் குடியுரிமையை மீள வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தற்காலத்தில் இலங்கையின் மத்தியவங்கியின் ஆளுநராக இருக்கின்ற அர்ஜீன் மகேந்திரன் சிங்கபூர் பிரஜை என்ற விமர்சனங்களும் தற் காலத்தில் எழுகின்றது. அவ்வகையில் ஆட்சியாளர்கள் தங்களின் சுயநலத்திற் காகவும் குடியுரிமையைப் பறிக்கவும் அதனை மீளக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையில் இரட்டை குடியுரிமை தற்காலத்தில் அமுல்படுத்தப் பட்டுள்ளது. இவ்விரட்டை குடியுரிமை யானது சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு சாதகமான வாய்ப்பாக அமைகின்றது. இவர்கள் உள்நாட்டுக்குள் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு குடியுரிமை பறிக்கப்பட்டாலும் வேறுநாட்டில் சென்று தப்பித்துக்கொள்ள வாய்ப்பாக அமைகின்றது. அத்துடன் தாய்நாட்டின் மீதான பக்தி குறைவடைவதுடன் தேசத் துரோகம் புரியவும் வாய்ப்பாக அமைகின்றது. உழைப்பின் நிமிர்த்தம், வெளிநாடுகளில் பணிபுரியச் சென்றோர் புலம்பெயர் இலங்கையர்களுக்கு இது ஒரு சிறந்த ஏற்பாடாக காணப்படுகின்றது. இருப்பினும் சமூகத்தை சீர்குலையச் செய்யக்கூடியவர்கள், நாட்டை விட்டு சென்றோர் போன்றோருக்கு இரட்டை குடியுரிமை வழங்குவதில் மட்டுப்பாடுகள் காணப்படுகின்றது.

இலங்கையில் குழுவுரிமைகள் தொடர்பில் தெளிவான ஏற்பாடுகள் காணப்படாமை சிக்கல் நிறைந்த ஒன்றாக உள்ளது. அவ்வகையில் சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பில் இன்னும் சுமூகமான தீர்வுகள் எட்டப்படாமல் காணப்படுவதால் தொடர்ந்தும் இரண்டாந் தர பிரஜைகளாக தன்னை எண்ணக்கூடிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் அரசியல் யாப்பில் பிரஜைகள் அனுபவிக்க கூடிய உரிமைகள் இன்னும் முழுமையாக அமுல்படுத்தமுடியாத நிலை காணப்படு கின்றது. உயிர் வாழும் உரிமை குடியுரிமைக்கு அத்தியாவசியமாகும். ஆனால் இன்று வரை உயிர் வாழும் உரிமை

யாப்பில் உத்தரவாதப்படுத்தப் படவில்லை. அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளபடி பெண்களை சமமான குடிமக்களாக மாற்றுவதற்கான பரந்தளவிலான புதிய உரிமைகளுக்காக தாராளப்பெண்ணியவாதிகள் போராடுகின்றார்கள். ஆண்களைப் போலவே பெண்களும் குடிமக்களாக மாறினாலும் அவர்களின் முறையான குடியுரிமை ஆணாதிக்க சக்தியின் கட்டமைப்புக்குள்ளேயே காணப்படுகின்றது. பெண்களின் குணங்களும் பணிகளும் இன்னமும் மதிக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. ஒருநாட்டிற்காக ஒருவர் இறப்பதும் கொல்லப்படுவதும் குடியுரிமை பெறுவதைக்காட்டிலும் மதிக்கப்படுகின்றது. யுத்தம் உள்ள ஒரு நாட்டில் இந்நிகழ்வானது அரசாங்கங்கள் இளைஞர்களை படையினராக நியமிப்பதில் முக்கிய தாக்கம் செலுத்துகின்றது.

நாடு ஆபத்தான சூழ்நிலையில் இருக்கும் போது பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால தடைச்சட்டம் அமுலில் இருக்க வேண்டும். இலங்கையில் சிவில் யுத்தம் முடிவடைந்த நிலையில் இன்னும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் உள்ளமையானது பிரஜைகளின் உரிமைக்கு அச்சுறுத்தலாக உள்ளது. பெண்களின் உரிமை, சிறுவர்களின் உரிமை என்பன இன்னும் சிக்கல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது, பிரஜைகளின் உரிமைகளை நடைமுறைப் படுத்தவும், பாதுகாக்கவும் சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதுடன் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தையும் உள்ளடக்கியுள்ளது. ஆனால் நடைமுறையில் இவற்றின் அனுபவத்தன்மை செயற்றிறனற்றுக் காணப்படுகின்றது. இருப்பினும் ஒட்டுமொத்த உரிமைகளை அனுபவிக்கமுடியாத நிலையில் இலங்கை பிரஜைகள் இருக்கின்றனர் என்ற முடிவுக்கு வரமுடியாது.

2009ம் ஆண்டில் நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமைச்சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட போதிலும் சட்டத்தின் இறுக்கமான நடைமுறைகள் இன்றுவரை நாடற்றவர்களது பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வினை முன்வைக்க முடியவில்லை. இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தினைக் கட்டியெழுப்பும் நோக்கில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல்கள் நல்லாட்சி அரசாங்க காலத்தில் முனைப்புடன் முன்னெடுக்கப் பட்டன. இதற்கான தற்காலிக வரைபு ஒன்றும் வெளியடப்பட்ட போதிலும் அவ்வரைபில் குடியுரிமை சிக்கல் குறித்து கவனம் செலுத்தவில்லை. இதனைவிட இனங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளும் முதலாம்தரப்பிரஜைகள் இரண்டாம் தரப்பிரஜைகள் என்ற வேறுபாட்டினை ஏற்படுத்துகின்றன.

**முடிவுரை**

இலங்கையில் குடியுரிமைச் சட்டங்கள் மிக நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ள போதிலும் அவற்றின் அடிப்படை 1948 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தங்களே குடியுரிமையின் பரிணாம வளர்ச்சியினை நிர்ணயித்த காரணிகளில் முதன்மையாகவுள்ளது. குடியுரிமை வளர்ச்சியில் இரண்டாம் குடியரசு அரசியல்யாப்பு முதன்மையான ஒன்றாகவுள்ளது. குடியுரிமையில் காணப்பட்ட வேறுபாடுகளை நீக்கி பொதுவான வகையில் இலங்கைப் பிரஜை என்ற ஒற்றை அந்தஸ்தையும் குடியுரிமைக்கு வலுச்சேர்க்கும் வகையில் அடிப்படை உரிமைகள் என்ற ஏற்பாட்டி

னையும் இணைத்திருந்தமை குடியுரிமை வளர்ச்சியல் முக்கிய திருப்பு முனையாக வுள்ளது. ஆயினும் தொடர்தேர்ச்சியாக காணப்பட்ட நாடற்றவர்களது பிரச்சினைக்கு 2003ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 35ம் இலக்க திருத்தச்சட்டம் தீர்வினை வழங்கியது.

ஆயினும் இலங்கையின் இன முரண்பாடுகள் மற்றும் தீவரஇனவாதச் செயற்பாடுகளின் காரணமாக நாடற்றவர்களது பிரச்சினை தொடர்ச்சியாகக் காணப்படுவதுடன் இரட்டைக் குடியரிமை மற்றும் பயங்கர வாத்தடைச்சட்டம் என்பன குடியுரிமை தொடர்பான மட்டுப்பாடுகளை விதிப்பதா கவும் அமைகின்றன. ஆயினும் இன நல்லிணக்கச் செயற்ாடுகள் மற்றும் நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகளின் ஊடாக இவ்வாறான பிரச்சினைகளுக்கு சரியான ஒரு தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மேற்குறிப்பிட்ட விடயங்க ளை உள்வாங்கிச் செயற்படுவது சாலச் சிறந்ததாகும்.

**உசாத்துணைகள்**


Bellamy, R. (2008). *Citizenship: A very short introduction.* UK:Oxford University Press.

*Citizenship Act No. 18 of 1948.* (1948). Available at https://www.justice. gov/sites/default/files/eoir/legacy/2013/11/08/citizensh ip_3.pdf

Commission of Elections, Sri Lanka. (2018). *Presidential election 1988: All island result.* Available at http://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/presidential-elections/PresidentialElections1988.pdf (Accessed May 20, 2018).

Department of Census and Statistics. (2014). *Census of population and housing-2012 (New) - Final report.* Colombo: Department of Census and Statistics. Available at http:// www. statistics.gov.lk/PopHouSat/CPH2012Visualization/htdocs/index.php?usecase=indicator&action=Map&indId=10 (Accessed May 20, 2018).

Department of Government Printing. (1972). *The Constitution of Sri Lanka (Ceylon) 1972.* Colombo: Department of Government Printing.

Department of Government Printing. (2003). *Grant of citizenship to persons of Indian origin Act,* No. 35 of 2003. Colombo: Department of Government Printing.

Department of Government Printing. (2009). *Grant of citizenship to stateless persons (Special Provisions) (Amendment) Act,* No. 5 of 2009. Colombo: Department of Government Printing.

Department of Immigration and Emigration Sri Lanka. (2018). *History of immigration and emigration and citizenship in Sri Lanka.* Available at http://www.immigration. gov.lk/web/index.php?option=com_content&view=article&id=132&Itemid=59&lang=en (Accessed March 20, 2018).

Ganeshathasan, L., & Welikala, A. (2017). *Report on citizenship law: Sri Lanka*. Italy: European University Institute.

*Grant of Citizenship to Stateless Persons Act,* No. 5 of 1986. (1987). Available at http:// www. refworld. org/docid/3ae6b5081c.html (Accessed May 15, 2018).

Hariharan, R. (2013). Adding substance to SAARC: India Sri Lanka experience. In S. Goud & M. Mookherjee (eds.), *India Sri Lanka relations: Strengthening SAARC* (pp. 36-47). India: Allied Publishers Pvt Ltd.

Heater, D. (2004). *A brief history of citizenship.* USA: New York: University Press.

I*ndian and Pakistani Residents (Citizenship) Act No. 3 of 1949. (1949).* Government of Sri Lanka. Retrieved from http://www. example website.com/act1949

Kodikara, S. U. (1978). Contemporary Indo-Lanka relations. *Sri Lanka Journal of Social Sciences,* 1(1), 61-73.

Marshall, T. H. (1950). *Citizenship and social class*. UK: Cambridge University Press.

Martinez, J. (2013). Slavery and citizenship in Aristotle's Politics. *FILOZOFIA,* 68(2), 124-132.

Mead, L. (1997). Citizenship and social policy: T. H. Marshall and poverty. *Social Philosophy and Policy,* 14(2), 197-230.

Miller, D. (2000). *Citizenship and national identity.* UK: Polity Press.

Ministry of External Affairs, India. (2018). *Agreement on persons of Indian origin in Ceylon-1964.* Available at https:// mea. gov. in/ bilateral-documents. htm? dtl/ 6426/ Agreement+on+Persons+of+Indian+Origin+in+Ceylon

Parliament of Sri Lanka. (2015). *The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka 1978.* Colombo: Parliament of Sri Lanka.

Periris, L.L.T. (1974). *The citizenship law of the republic of Sri Lanka.* Sri Lanka: Lake house Investment.

Ruwanpura, K. N. (2006). Matters of citizenship: Experiences of plantation workers in Sri Lanka. *Geoforum,* 37(2): 284-297.

Vijayapalan, V. (2014). *Endless inequality: The rights of the plantation Tamils in Sri Lanka.* Sri Lanka: Mayan Vije Limited.

Wolozin, R. (2014). Citizenship issues and issuing citizenship: A case study of Sri Lanka's citizenship laws in a global context. *Asia Pacific Law and Citizenship Journal,* 16(1)*,* 1-28.

Wickramasinghe, N., & Kodikara, S.U. (2012). Ethnic politics and the crisis of citizenship in Sri Lanka. *Journal of Asian and African Studies,* 47(4): 397-415.

Wickramasinghe, N. (2006). Sri Lanka's failed peace process and the role of citizenship in conflict resolution. *Third World Quarterly,* 27(3): 443-458.